05.02.2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 24/2016**

அ.சா.4

**பெயர்.திரு. பாஞ்சாலி**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது. நான் யார் சொல்லி கேள்விப்பட்டு வந்தேன் என்றால் எனக்கு ஆறுமுகம் என்பவர் சொன்னார். அவர் இரவு 11 மணிக்கு என்னிடம் சொன்னார். நான் நேராக முண்டியம்பாக்கத்தில் பிரேத பரிசோதனை செய்யும் இடத்திற்கு சென்றேன். அனைவரும் அங்கு தான் சென்றோம். எனது கணவர் அ.சா.3. காவல் நிலையத்திற்கு வரவில்லை. எனது மகன் இறந்து 4 நாள் கழித்து நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். ராக்கி ரமேஷ் எனது மூத்தார் மகன் என்றால் சரிதான். எனது மகனுக்கும், மூத்தார் மகனுக்கும் இடையே பகை எதுவும் இல்லை. அவர் மீது நிறைய கொலை வழக்குகள் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியும். தற்போது அவரை வேறு யாரோ கொலை செய்து விட்டார்கள். அவர் நிறைய கொலை செய்துள்ளதாலும், அதற்கு எனது மகன் உடந்தையாக இருந்ததாலும் என் மகனால் பாதிக்கப்பட்ட யாரோ பழிவாங்கும் நோக்கத்தில் என் மகனை கொலை செய்துவிட்டார்கள் என்றும் நான் முன்விரோதத்தின் காரணமாக எதிரி மீது குற்றம் சாட்டுகிறேன் என்றால் சரியல்ல. நான் கெடார் காவல் நிலையத்தில் எதிரிகளை பார்த்தேன். எதிரிகளின் உடையில் நான் இரத்த கறையை பார்த்தேன்.